# இஸ்லாம் பாட மாணவர் கையேடு

## வடக்கு மாகாணம்

## தரம் - 7

### 01 - தௌஹீத், ரிஸாலத், மஆத்

1. ஈமான் என்பதன் மொழிக் கருத்து யாது?
   நம்பிக்கை

2. ஈமான் எத்தனை வகைப்படும். அவை யாவை?
   இரண்டு (02) வகைப்படும்.
   1. ஈமான் முஜ்மல் (சுருக்கமான ஈமான்)
   2. ஈமான் முபஸ்ஸல் (விரிவான ஈமான்)

3. **"லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்"** என்பதன் கருத்து யாது?
   வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை, முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்.

4. **ஈமான் முபஸ்ஸல்** எத்தனை அம்சங்களை உள்ளடக்கியதாகும். அவை யாவை?
   **ஆறு (06)** அம்சங்களை உள்ளடக்கியதாகும்.
   1) அல்லாஹ்வை ஈமான் கொள்ளல்
   2) மலக்குமார்களை ஈமான் கொள்ளல்
   3) வேதங்களை ஈமான் கொள்ளல்
   4) ரஸூல்மார்களை ஈமான் கொள்ளல்
   5) மறுமை நாளை ஈமான் கொள்ளல்
   6) கலா கத்ரை ஈமான் கொள்ளல்.

5. **தவ்ஹீத்** என்றால் என்ன?
   ஏகத்துவம்

6. **ரிஸாலத்** என்றால் என்ன?
   தூதுத்துவம்

7. **மஆத்** என்றால் என்ன?
   மறுமையுடன் தொடர்புடையவை

8. இறுதியாக அனுப்பப்பட்ட நபி யார்? அவருக்கு வழங்கப்பட்ட வேதம் யாது?
   - முஹம்மது நபி ஸல் அவர்கள்
   - புர்கான் வேதம்.

## *02 - அல்லாஹ் வணக்கத்துக்குரியவன்*

1. *அல்லாஹ் இவ்வுலகை படைக்க பயன்படுத்திய சொற்பிரயோகம் யாது?*
   - *குன் (ஆகுக)*

2. *அல்லாஹ் மனிதனைப் படைத்த நோக்கத்தை அல்குர்ஆனில் எவ்வாறு குறிப்பிடுகின்றான்?*
   - *இறைவனை வணங்குவதற்காக என்று*

3. *அல்லாஹ் ஒரு போதும் மன்னிக்காத பாவம் எது?*
   - *இணைவைப்பு (ஷிர்க்)*

4. *வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் மட்டுமே என்பதற்கு அல்குர்ஆன் முன்வைக்கும் ஆதாரம் ஒன்று தருக?*
   - *உமக்கு முன்னர் நாம் அனுப்பிய தூதர்களுக்கெல்லாம், நிச்சயமாக என்னைத் தவிர வேறு நாயன் இல்லை ஆகவே என்னையே நீங்கள் வணங்குங்கள் என்று வஹீ அறிவித்தோம். (21 : 25)*

5. ***வணக்கத்துக்குரியவன்** என்பதன் பொருள் யாது?*
   - *உதவி தேட தகுதியானவன் அல்லாஹ் மாத்திரமே என்பதாகும்.*

6. *எமது சகல தேவைகளையும் நாம் யாரிடம் முன்வைக்க வேண்டும்?*
   - *அல்லாஹ்விடம்*

7. *முக்காலத்தையும் அறிந்தவன் யார்?*
   - *அல்லாஹ் மாத்திரமே*

## *03 - அல்லாஹ்வின் பண்புகள்*

1. *ஸிபதுல்லாஹ் என்றால் என்ன?*
   *அல்லாஹ்வின் பண்புகளை குறிக்கும்.*

2. *அல்லாஹ்வின் பண்புகள் எத்தனை வகைப்படும் . அவை எவை?*
   *மூன்று (03) வகைப்படும்.*
   1) *வாஜிபாத்*
   2) *முஸ்தஹிலாத்*
   3) *ஜாயிஸ்.*

3. *வாஜிபாத் என்றால் என்ன?*
   *அல்லாஹ்விற்கு கட்டாயம் இருக்க வேண்டிய பண்புகளைக் குறிக்கும்.*

4. *வாஜிபான பண்புகள் எத்தனை?*
   *20*

5. *முஸ்தஹிலாத் என்றால் என்ன?*
   *அல்லாஹ்வுக்கு இருக்க முடியாத பண்புகள்.*

6. *முஸ்தஹிலாதான பண்புகள் எத்தனை?*
   *20*

7. *ஜாயிஸ் என்றால் என்ன?*
   *அல்லாவுக்கு இருக்கவும் இல்லாது இருக்கவும் முடியுமான பண்புகள்.*

8. *வாஜிபான பண்புகள் 5 தருக?*
   1. *உஜூதுன் (உள்ளமை)*
   2. *கிதமுன் (ஆரம்பமில்லாமை)*
   3. *ஹயாதுன் (சீவித்தல்/சீவன்)*
   4. *இல்முன் (அறிவு)*
   5. *இராததுன் (நாட்டம்)*
   6. *குத்ரதுன் (சக்தி)*

## *04 - மலக்குகளை விசுவாசம் கொள்வோம்*

1. *ஈமானின் இரண்டாவது அம்சம் எது?*
    - *மலக்குகளை ஈமான் கொள்ளல்*

2. *மலக்குகள் எதனால் படைக்கப்பட்டார்கள்?*
    - *ஒளியினால்*

3. *ஜின்கள் படைக்கப்பட்ட மூலப்பொருள் எது?*
    - *நெருப்பு*

4. *ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு எத்தனை இறக்கைகள் உண்டு?*
    - *600 இறக்கைகள்*

5. *மலக்குகளின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் 5 தருக?*
    1. *அல்லாஹ்வை சதாவும் துதி செய்துகொண்டிருத்தல்*
    2. *அர்ஷை சுமத்தல்*
    3. *மனிதர்களைப் பாதுகாத்தல்*
    4. *நன்மை தீமையை பதிவு செய்தல்*
    5. *சுவர்க்கத்தை அலங்கரித்தல்*
    6. *நல்லடியார்களுக்கு உதவுதல்*
    7. *உயிர்களை கைப்பற்றல்*

6. *மலக்குகளின் தலைவர் யார்?*
    - *ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்*

7. *மலக்குகளின் பெயர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளும் யாவை?*
    1. *ஜிப்ரில் அலை :- நபிமார்களுக்கு வஹி கொண்டுவருதல்*
    2. *மீக்காஈல் அலை :- உணவு, காற்று, நீர், நெருப்பு என்பவற்றுக்கு பொறுப்பாய் இருத்தல்*
    3. *இஸ்ராஃபீல் அலை :- சூர் ஊதுதல் இருமுறை*
    4. *இஸ்ராயீல் அலை (மலக்குல் மௌத்) :- உயிர்களைக் கைப்பற்றுதல்*
    5. *முன்கர், நகீர் அலை :- கப்ரில் கேள்வி கணக்குகள் கேட்டல்*
    6. *ரகீப், அதீத் (அலை) :- மனிதர்கள் செய்யும் நன்மை தீமைகளை பதிவு செய்தல்*
    7. *மாலிக் அலை :- நரகின் அதிபதி*
    8. *ரில்வான் அலை :- சுவர்க்கத்தின் அதிபதி*

## *05 - நஜீஸின் வகைகள்*

1. *நஜீஸ் என்பதன் கருத்து யாது?*
    - *அசுத்தம்*

2. *நஜீஸ் எத்தனை வகைப்படும். அவை எவை?*
   *மூன்று (03) வகைப்படும்*
    1. *சாதாரண நஜீஸ்*
    2. *இலகுவான நஜீஸ்*
    3. *கடுமையான நஜீஸ்*

3. *சாதாரண நஜீஸுக்கான உதாரணங்கள் ஐந்து தருக?*
    1. *மலம்*
    2. *சிறுநீர்*
    3. *இரத்தம்*
    4. *வாந்தி*
    5. *மதி, வதி*

4. *சாதாரண நஜீஸை சுத்தம் செய்யும் முறையை தருக?*
    - *குறிப்பிட்ட நஜீஸ் உடலிலோ ஆடையிலோ படிந்து விட்டால் முதலில் அதனை அவ்விடத்திலிருந்து நீக்கி விட வேண்டும். பின்னர் சுவை, நிறம், மணம் ஆகிய மூன்றும் நீங்கும்வரை கழுவ வேண்டும். நீரால் மாத்திரம் நஜீஸை நீக்க முடியாத போது சவர்க்காரம் அல்லது சலவைத்தூள் பயன்படுத்த வேண்டும்.*

5. *இலகுவான நஜீஸ் என்றால் என்ன?*
    - *தாய்ப்பாலை மட்டும் உணவாக உட்கொள்ளும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர்.*

6. *இலகுவான நஜிசை சுத்தம் செய்யும் முறையை தருக?*
    - *தாய்ப்பாலை மட்டும் உணவாக உட்கொள்ளும் இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தையின் சிறுநீர் ஆடையில் பட்டால் பிளிந்து அகற்றிய பின்னர் அவ்விடத்தில் சுத்தமான நீரை போதிய அளவு தெளித்து விடுவது போதுமானதாகும்.*

7. *கடுமையான நஜீஸில் அடங்குபவை எவை?*

- *நாய், பன்றி என்பவற்றின் மலம், சலம், உமிழ்நீர், வியர்வை, இரத்தம் போன்றவை இவற்றில் அடங்கும்.*

8. *கடுமையான நஜீஸை சுத்தம் செய்யும் முறையை தருக?*
    - *இந்த நஜீஸ் பட்ட இடத்தை விட்டு நஜீஸை அகற்றிவிட்டு ஏழு தடவைகள் நீரூற்றி கழுவுதல் வேண்டும். அதில் ஒரு தடவை மண் கரைசலை உபயோகித்து கழுவுதல் வேண்டும்.*

9. *உறைந்த நெய், உறைந்த பால், பட்டர், சீஸ் போன்ற கட்டியான நிலையில் விழுந்தால் அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?*
    - *நஜீஸ் விழுந்த பகுதியை எடுத்து விட்டு எஞ்சியதை பயன்படுத்த வேண்டும்.*

## *06* - தொழுகைக்கு ஆயத்தமாவோம்

1. *வுழுச் செய்பவர் மறுமையில் எவ்வாறு எழுப்பப்படுவார்?*
    - *முகம், இரு கைகள், இரு கால்கள் பிரகாசம் மிக்கவர்களாக எழுப்பப்படுவார்கள். **( ஹுர்ரதன் முஅஜ்ஜலின் )***

2. *தயம்மும் என்றால் என்ன?*
    - *தயம்மும் என்பது கடமையான குளிப்பு அல்லது வுழுவிற்காக தண்ணீரை பயன்படுத்த முடியாத போது அதற்கு பதிலாக சுத்தமான மண்ணைப் பயன்படுத்தி முகம் மற்றும் இருகைகளையும் மஸ்ஹு செய்வதை குறிக்கும்.*

3. *தயம்மும் செய்ய முடியுமான சந்தர்ப்பங்கள் மூன்றை தருக?*
    1. *சிரமப்பட்டு தேடியும் தண்ணீர் கிடைக்காமை*
    2. *தண்ணீரை உபயோகிப்பதால் நோய் ஏற்படலாம் அல்லது நோய் அதிகரிக்கலாம் எனும் நிலைமை வரும்போது*
    3. *கையிருப்பில் உள்ள நீரை பயன்படுத்தினால் அத்தியாவசியத் தேவைக்கு நீர் போதாமல் போகும் என்ற நிலை ஏற்படும் போது.*

4. *தயம்முமிற்கு உட்படுத்தப்படும் உறுப்புக்கள் எவை?*
    - *முகமும் இரு கைகளும்*

5. தயம்முமை முறிக்கும் காரியங்கள் எவை?
    1. முன் பின் துவாரங்களில் இருந்து ஏதாவது வெளியேறுதல்
    2. புத்தி நீங்குதல் (மயக்கம், தூக்கம் போதை என்பவற்றால்)
    3. அஜ்னபியான ஆண்கள், பெண்கள் திரையின்றி இச்சையுடன் தொடுதல்
    4. எவ்வித திறையுமின்றி அகத்தை தொடுதல்
    5. தண்ணீரின்றி தயம்மும் செய்து குறிப்பிட்ட தொழுகையை தொழுவதற்கு முன்னர் தண்ணீரைப் பெற்றுக் கொள்ளல்
    6. நோயின் காரணமாக தயம்மும் செய்து தொழுவதற்கு முன் நோய் குணமடைதல்

6. ஜபீரத் என்றால் என்ன?
    - உறுப்புகளில் காயம் ஏற்பட்டதற்காக போடும் கட்டு பெண்டேஜ் ஆகும்.

## *07* - உடல் சுத்தம்

1. சுத்தம் என்பதன் அரபுப் பதம் யாது?
    - அத்தஹாரத்

2. சுத்தமாக இருப்பதன் மூலம் ஏற்படும் நன்மைகள் 5 தருக?
    1. சுவர்க்கம் செல்ல முடியும்
    2. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்
    3. மலக்குகளும் மனிதர்களும் விரும்புவார்கள்
    4. உள்ளத்திற்கு புத்துணர்ச்சி ஏற்படும்
    5. உடலுக்கு புது தெம்பு கிடைக்கும்

3. குளிப்பு எத்தனை வகைப்படும். அவை யாவை?
    - இரண்டு வகைப்படும்
    1. பர்ளான குளிப்பு
    2. சுன்னத்தான குளிப்பு

4. ஜனாபத் என்றால் என்ன?
    - பெருந் தொடக்கு

5. ஜனாபத் உடையவர் செய்யக் கூடாத மூன்று காரியங்கள் எவை?
    1. தொழுதல்
    2. கஅபாவை தவாஃப் செய்தல்
    3. மஸ்ஜிதினுள் தங்குதல்

6. சுன்னத்தான குறிப்புகள் 5 தருக?
    1. ஜும்மாவுக்காக குளித்தல்
    2. இரு பெருநாள் தினங்களில் குளித்தல்
    3. இஹ்ராமுக்காக குளித்தல்
    4. கிரகண தொழுகைக்காக குளித்தல்
    5. ஜனாஸாவை குளிப்பாட்டியவர் குளித்தல்

7. குளிப்பதற்கு பயன்படுத்தப்படும் நீரின் வகை எது?
    - மிகச் சுத்தமான நீர் (அல் மாவுத் தஹூர்)

8. சுத்தம் கட்டாயமாக தேவைப்படும் மூன்று இபாதத்துக்களை தருக?
    1. தொழுகை
    2. ஹஜ்
    3. இஃதிகாஃப்
    4. கஃபாவை தவாஃப் செய்தல்

9. சிறு தொடக்கு என்றால் என்ன. அதை நீக்குவதற்கான வழிமுறைகள் யாது?
    1. சிறு தொடக்கு என்பது வுழு இல்லாத நிலையாகும்
    2. உளூச் செய்தல் வேண்டும்

10. பெருந்தொடக்கு என்றால் என்ன?
    - பெருந்தொடக்கு என்பது குளிப்புக் கடமையாக உள்ள சந்தர்ப்பமாகும்.
    - உதாரணமாக : மாதவிடாய், நிபாஸ்

11. பெருந்தடக்கில் இருந்து நீங்குவதற்கான வழிமுறை யாது?
    - குளித்து சுத்தமாகுதல்.

12. உளூச் செய்தால் கிடைக்கும் பயன்கள் 2 தருக.?
    - உளூச் செய்யும் உடல் உறுப்புக்கள் சுத்தமாக இருத்தல்
    - உளூச் செய்யும் போது நனைந்த உறுப்புக்கள் மறுமை நாளில் பிரகாசம் அளிக்கும்.

## *08 - தொழுகையின் முக்கியத்துவம்*

1. *மறுமையில் முதல் முதலில் விசாரிக்கப்படும் அமல் எது?*
    - *தொழுகை*

2. *தொழுகை எந்த சந்தர்ப்பத்தில் கடமையாக்கப்பட்டது?*
    - *மிஃராஜ் பயணத்தின் போது*

3. *மிஃராஜ் பயணம் எந்த மாதத்தில் நடைபெற்றது?*
    - *ரஜப் மாதத்தில்*

4. *ஜமாஅத்தாகத் தொழுவதன் மூலம் எமக்கு கிடைக்கும் நன்மைகளை 5 தருக?*
    1. *ஐக்கியம் ஏற்படும்*
    2. *சமத்துவம் ஏற்படும்*
    3. *பரஸ்பர அன்பு, சகோதரத்துவம் சமூக உணர்வு தலைமைக்கு கட்டுப்படுதல்*
    4. *கூட்டுச் செயற்பாடு*

5. *சுபஹுத் தொழுகையை தொழாதவர் எவ்வாறு இருப்பான்?*
    1. *சுபஹு தொழாதவனின் முகத்தை ஷைத்தான் அசிங்கப்படுத்துவான்.*
    2. *அன்றைய தினம் உற்சாகம் இழந்து காணப்படுவான்*
    3. *அல்லாஹ்வின் பாதுகாப்பை இழந்துவிடுவான்.*

6. *தொழுகை மூலம் தடுக்கப்படும் விடயங்கள் யாவை?*
    1. *மானக்கேடான காரியங்களை விட்டும் தடுக்கின்றது*
    2. *தீய காரியங்களை விட்டும் தடுக்கின்றது*
    3. *பாவங்கள் செய்வதை விட்டும் தடுக்கின்றது*

7. *பிறருக்கு காண்பிப்பதற்காக தொழுபவர்களது நிலை எவ்வாறு இருக்கும்?*
    1. *முகஸ்துதியை உண்டாக்கும்*
    2. *நரகம் செல்வதற்கு வழிவகுக்கும்*

## *09 -* நோன்பின் முக்கியத்துவம்

1. ரமலான் மாதம் இஸ்லாமிய மாதங்களில் எத்தனையாவது மாதமாகும்?
    - ஒன்பதாவது மாதம் ஆகும்

2. அஸ்ஸவ்ம் என்பதன் தமிழ் பதம் யாது?
    - நோன்பு

3. நோன்பு ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு கடமையாக்கப்பட்டது?
    - ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு

4. நோன்பின் பர்ளுகள் எத்தனை. அவை யாவை?
    - இரண்டு (02)
    1. நிய்யத்து வைத்தல்
    2. சஹர் முதல் இப்தார் வரை நோன்பை முறிக்கும் காரியங்களில் ஈடுபடாது தவிர்த்தல்.

5. நோன்பு நோற்பதில் இருந்து சலுகை வழங்கப்பட்டவர்கள் யார்?
    1. நோயாளிகள்
    2. வயோதிபர்கள்
    3. கர்ப்பிணி பெண்கள்
    4. பாலூட்டும் தாய்மார்கள்
    5. மாதவிடாய் ஏற்பட்ட பெண்கள்
    6. பயணிகள்

6. நோன்பாளிகள் எந்த வாசலினால் சொர்க்கம் நுழைவார்கள்?
    - ரய்யான் எனும் வாசலினால்

7. நோன்பின் மூலம் ஏற்படக்கூடிய நற்குணங்கள் யாவை?
    1. மனக்கட்டுப்பாடு
    2. பொறுமை
    3. சகிப்புத்தன்மை
    4. வறிய மக்கள் மீது அனுதாபம் ஏற்படும்
    5. இபாதத்களில் ஆர்வம்
    6. பாவங்களிலிருந்து தூரம் ஆகுதல்

8. நோன்பாளிகளுக்கு ஏற்படும் இரு மகிழ்ச்சிகளும் எவை?
    1. நோன்பு திறக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சி
    2. தனது ரப்பை சந்திக்கும் போது ஏற்படும் மற்றற்ற மகிழ்ச்சி

9. ரமலான் பாதத்தில் காணப்படும் சிறப்புக்குரிய இரவு யாது?
    - லைலத்துல் கத்ர் (இரவு)

10. இஃதிகாஃப் என்றால் என்ன?
    - பள்ளிவாசலில் தரித்தல்

11. அய்யாமுல் பீழ் என்றால் என்ன?
    - ஒவ்வொரு மாதமும் பிறை 13, 14, 15

12. சுன்னத்தான நோன்புகள் நோக்கப்படும் காலங்கள் எவை?
    1. வாராந்தம் : திங்கள், வியாழன்
    2. மாதாந்தம் : பிறை 13 14 15
    3. வருடாந்தம் : தாஸூஆ , ஆஷூ ரா (முஹர்ரம் மாதம் பிறை 9, 10)
    4. ஷவ்வால் மாதத்தின் ஆறு நாட்கள்
    5. துல்ஹஜ் மாதம் பிறை 1 தொடக்கம் 8 வரை
    6. யவ்முல் அரபா

## 10 - துஆவும் திக்ரும்

1. துஆ என்றால் என்ன?
    - பிரார்த்தனை

2. பிரார்த்தனைகள் அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகள் யாவை?
    1. அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்தித்தல்
    2. அல்லாஹ் தனது பிரார்த்தனைக்கு பதிலளிப்பான் என்ற உறுதியுடன் பிரார்த்தித்தல்
    3. எல்லா விவகாரங்களிலும் ஹலாலை பேணுதல்
    4. உறவுகளை துண்டிக்காதிருத்தல்
    5. நல்ல காரியங்களுக்காக பிரார்த்தித்தல்
    6. பதிலுக்கு அவசரப்படாதிருத்தல்

3. பிரார்த்திப்பவர் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் 5 தருக?
    1. உள்ளச்சத்துடனும் பணிவுடனும் மன்றாடி பிரார்த்தித்தல்
    2. இஹ்லாஸுடனும் விருப்புடன் பிரார்த்தித்தல்
    3. பிரார்த்திக்கும் முன் நற்செயல் ஒன்றை புரிதல்
    4. குரலைத் தாழ்த்தி இரு கைகளையும் உயர்த்தி பிரார்த்தித்தல்
    5. மிஸ்வாக் செய்து உழுவுடனும் தூய்மையுடனும் பிரார்த்தித்தல்

4. பிரார்த்தனையின் நிபந்தனைகள் யாவை?
    1. தான் செய்து வந்த பாவத்தை விட்டும் முற்றுமுழுதாக நீங்க வேண்டும்
    2. ஒரு மனிதனுடன் தொடர்பு பட்ட பாவமாக இருந்தால் உரிய மனிதரிடம் முதலில் மன்னிப்பு கேட்க வேண்டும்
    3. செய்த பாவத்தை எண்ணி வருந்தி பிரார்த்திக்க வேண்டும்.

5. திக்ரு என்றால் என்ன?
    - அல்லாஹுவை நினைவு கூறுதல்

6. திக்ரு எத்தனை வகைப்படும். அவை எவை?
    - இரண்டு (02) வகைப்படும்
    1. திக்ரு கல்பி
    2. திக்ரு லிசனி

7. திக்ரு கல்பி என்றால் என்ன?
    - அல்லாஹ்வை உள்ளத்தால் நினைவு கூறுதல்

8. திக்ரு லிசானி என்றால் என்ன?
    - நாவினால் மொழிந்து அல்லாஹ்வை நினைவு படுத்தல்

9. திக்ரின் மூலம் கிடைக்கும் பயன்கள் மூன்று தருக?
    1. உள்ளங்கள் அமைதி அடைகின்றன.
    2. இம்மை , மறுமை வெற்றி கிடைக்கின்றன
    3. அல்லாஹ் பற்றிய சிந்தனையுடன் வாழ வழி வகுக்கின்றது.

## *11 - நல்ல நட்பு*

1. *இஸ்லாம் கூறும் நட்பு எந்த அடிப்படையில் அமைய வேண்டும்?*
    1. *நட்பு கொள்ளப்படுபவன் இறை விசுவாசியாக இருத்தல் வேண்டும்*
    2. *அல்லாஹ்வுக்காக நேசித்தல்*
    3. *இறையச்சம் காணப்படுதல்*
    4. *நன்னடத்தை காணப்படுதல்*
    5. *நன்மையை ஏவி தீமையை தடுத்தல்*

2. *நட்பு நீடிப்பதற்கு இஸ்லாம் காட்டித்தந்த வழிமுறைகள் யாது?*
    - *நண்பனை முழுமையாக புரிந்து கொள்ளல்*
    - *நட்பை வெளிப்படுத்தல்*
    - *அன்பளிப்புகளை பரிமாறுதல்*
    - *வாழ்த்துக் கூறல், முசாபஹா, முஆனகா செய்தல்*

3. *முஸாபஹா என்றால் என்ன?*
    - *கைலாகு செய்தல்*

4. *முஆனகா என்றால் என்ன?*
    - *ஆரத் தழுவுதல்*

5. *சிறந்த நட்பின் பயன்கள் யாவை?*
    - *மறுமையில் நிழலே இல்லாத மஹ்ஷரில் இந்த நட்பு எமக்கு நிழல் பெற்றுத் தரும்*
    - *அல்லாஹ்வுக்காக நேசித்தவர் மறுமையில் உயர் அந்தஸ்தை பெறுவர்*
    - *நட்பு எமது ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும்*
    - *தீயநட்பு இழிவைத் தரும்*

6. *நல்ல நண்பனுக்கும் தீய நண்பனுக்கும் இடையிலான வேறுபாடு யாது?*
    - *நல்ல நண்பன் கஸ்தூரி வியாபாரியைப் போன்றவன்*
    - *கெட்ட நண்பன் கொல்லனைப் போன்றவன்*

## *12 - பிறருக்கு உதவுவோம்*

1. *மனிதர்களில் சிறந்தவர் யார்?*
    - *மனிதர்களுக்கு அதிகம் பயனளிப்பவர்*

2. *அல்லாஹ்வின் அன்பைப் பெற்றுத் தரும் செயல்கள் 5 தருக?*
    1. *நன்மையை ஏவி தீமையை தடுத்தல்*
    2. *குருடர், செவிடர், ஊமையர் போன்றோருக்கு உதவுதல்*
    3. *தாகத்தோடு இருப்பவருக்கு நீர் புகட்டுவது*
    4. *பசித்தவருக்கு உணவளிப்பது*
    5. *பலவீனருக்கு தோள் கொடுப்பது*
    6. *ஒரு முஸ்லிமின் கஷ்டத்தை நீக்குவதும் அவனது கடனை அடைப்பது*

3. *சமூகத்தால் பராமரிக்கப்படவேண்டிய நலிவுற்றோரை தருக?*
    - *அனாதைகள்*
    - *விதவைகள்*
    - *அங்கவீனர்கள்*
    - *ஏழைகள்*
    - *பெண்கள்*
    - *சிறியோர்*
    - *முதியோர்*

## *13 - பிறர் பொருட்களை அனுமதியுடன் பயன்படுத்துவோம்.*

1. *பிறர் வீட்டுக்கு செல்லும்போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகள் எவை?*
    - *சலாம் கூறுதல்*
    - *வாசலின் ஒரு பக்கமாக நிற்றல்*

2. *பிறர் பொருளை அனுமதியின்றி பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் ஐந்து தருக?*
    1. *குரோதம் வளரும்*
    2. *கோபம் ஏற்படும்*

3. தப்பெண்ணம் ஏற்படும்
4. ஒருவர் மற்றொருவர் மீது சந்தேகம் கொள்ள நேரிடும்
5. உறவுகளில் விரிசல் ஏற்படும்
6. அமைதி இன்மையும் குழப்பமான சூழலும் தோன்றும்

3. பொது இடங்களில் கண்டெடுக்கப்பட்ட பொருளை என்ன செய்ய வேண்டும்?
    - அவ்விடத்திலே விட்டுவிட வேண்டும் அல்லது அதன் உரிமையாளரை கண்டுபிடித்து அதனை ஒப்படைக்க வேண்டும்.

## 14 - அல்லாஹ்வின் வேதங்கள்

1. ஈமான் கொள்ள வேண்டிய விடயங்களில் வேதங்களைக் கொண்டு ஈமான் கொள்வது எத்தனையாவது அம்சமாகும்?
    - மூன்றாவது அம்சமாகும்

2. அல்லாஹுத்தஆலா அருளிய வேதங்களின் எண்ணிக்கை எத்தனை?
    - (4) நான்கு

3. உலகுக்கு அருளப்பட்ட பின்வரும் வேதங்கள் நான்கும் எத் தூதர்களுக்கு அருளப்பட்டன ?
    1. தவ்றாத் - மூசா அலைஹிஸ்ஸலாம்
    2. சபூர் - தாவூத் அலைஹிஸ்ஸலாம்
    3. இஞ்சீல் - ஈஸா அலைஹிஸ்ஸலாம்
    4. புர்கான் - முஹம்மது நபி சல்லல்லாஹு அலைஹி வசல்லம்

4. நான்கு வேதங்களும் அருளப்பட்ட மொழிகள் யாது?
    - அபரானி
    - யூனானி
    - சுரியானி
    - அரபாணி

5. ஸுஹுபுகள் என்றால் என்ன?

- ஆகமம் அல்லது ஏடு அல்லது இறைக் கட்டளைகள்

6. ஸுஹுபுகள் கொடுக்கப்பட்ட நபிமார்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட எண்ணிக்கைகளையும் குகுறிப்பிடு
    1. ஆதம் அலை - 10 ஸுஹுபுகள்
    2. ஷீத் அலை - 50 ஸுஹுபுகள்
    3. இத்ரீஸ் அலை - 30 ஸுஹுபுகள்
    4. இப்ராஹீம் அலை - 10 ஸுஹுபுகள்
    5. மூஸா அலை - 10 ஸுஹுபுகள்

7. வேதமும் ஸுஹுபுகளும் வழங்கப்பட்ட நபி யார்?
    - நபி மூஸா அலைஹிஸ்ஸலாம்

8. இறுதியாக அருளப்பட்ட வேதம் எது
    - அல்குர்ஆன்

## 15 - ஸூறா அல்கத்ர்

1. சூரா அல்கத்ர் அல்குர்ஆனின் எத்தனையாவது அத்தியாயம்?
    - 97 வது அத்தியாயம்

2. சூரா அல்கத்ர் அருளப்பட்ட இடம் எது?
    - மக்கா (மக்கி சூரா)

3. அல்குர்ஆன் எந்த இரவில் இறக்கி அருளப்பட்டது?
    - புனித லைலத்துல் கத்ர் எனும் இரவில்

4. சூரா அல் கத்ரில் எத்தனை ஆயத்துக்கள் உண்டு?
    - ஐந்து ஆயத்துக்கள்

5. *லைலத்துல் கத்ர் இரவு எத்தனை மாதங்களை விட சிறந்தது?*
    - *ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது*

6. *லைலத்துல் கத்ர் இரவு எந்த நாட்களில் எதிர்பார்க்கப்படுகின்றது?*
    - *ரமலான் மாதத்தின் பிறை 21, 23, 25, 27, 29 ஆகிய ஒற்றைப்பட இரவுகளில்*

7. *லைலத்துல் கத்ர் இரவில் நாம் செய்யக்கூடிய நற்செயல்கள் 5 தருக?*
    - *வணக்க வழிபாடுகளில் ஈடுபடல்*
    - *பாவமன்னிப்புக் கோருதல்*
    - *அத்திக்காய் இருத்தல்*
    - *குர்ஆன் ஓதுதல்*
    - *திக்ருகளில் ஈடுபடல்*

## *16 - ஸூறா அல் அலக்*

1. *சூறா அல் அலக் அல்குர்ஆனின் எத்தனையாவது அத்தியாயம்?*
    - *96 வது அத்தியாயம்*

2. *அல்குர்ஆனில் முதல் ஐந்து வசனங்கள் இறக்கப்பட்ட சந்தர்ப்பத்தை சுருக்கமாக குறிப்பிடுக.*
    - *நபி (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் தனிமையில் இருக்கின்றபோது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திடீரென அங்கு தோன்றி ஓதுவீராக! என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் தனக்கு ஓதத் தெரியாது என்று பதிலளித்தார்கள். பின்னர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நபி (ஸல்) அவர்களை கட்டி அணைத்து ஓதுவீராக! என கூறினார்கள். தனக்கு ஓதத் தெரியாது என மீண்டும் பதிலளிக்க, அவ்வாறு மூன்று தடவைகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சூறா அல் அலகின் முதல் ஐந்து வசனங்களையும் ஓதிக் காட்டினார்கள்.*

3. *இவ்வசனங்கள் முன்வைக்கும் கருத்துக்கள் 2 தருக?*
    1. *அல்லாஹ்தான் படைப்பாளன்*
    2. *எழுது கோலைக் கொண்டு மனிதனுக்கு கற்பித்துக் கொடுத்தான்.*

4. நபி ஸல் அவர்கள் ஹிராக் குகைக்குச் செல்வதை வழமையாக்கிக் கொண்டமைக்கான காரணங்கள் 2 தருக?
    1. ஜாஹிலியா சமூகம் அனாச்சாரங்களில் ஈடுபட்டதை வெறுத்தமையினால்
    2. இந் நிலை மாற்றமடைய வேண்டும் என்ற சிந்தனையில்

5. அல்லாஹ்வின் பண்புகள் 2 தருக?
    1. படைப்பாளன்
    2. சங்கைக்குரிய வன்

6. பின்வரும் தமிழ் பதத்தின் அரபு பதத்தை தருக?
    - இரட்சகன் - ரப்பு
    - மனிதன் - இன்சான்
    - எழுதுகோல் - கலம்
    - கற்பித்தான் - அல்லம

## 17 - சுன்னாவின் முக்கியத்துவம்

1. சுன்னா என்பதன் மொழிக் கருத்து யாது?
    - வழிமுறை

2. சுன்னா என்பதன் வரைவிலக்கணம் யாது?
    - நபிஸல் அவர்களின் சொல், செயல், அங்கீகாரம

3. சுன்னா என்ற கருத்தில் பயன்படுத்தப்படும் இன்னொரு சொல்லை தருக.
    - அல் ஹதீஸ்

4. வஹீ மத்லுவ் என்றால் என்ன?
    - ஓதிக் காண்பிக்கப்பட்ட வஹி

5. வஹி கைறு மத்லுவ் என்றால் என்ன?
    - ஓதி காண்பிக்கப்படாத வஹி

6. இஸ்லாத்தின் இரண்டாவது மூலாதாரம் எது?
    - சுன்னா

7. அல்குர்ஆனுக்கும் சுன்னாவுக்கும் இடையிலான தொடர்பு யாது?
    - அல் குர் ஆன் வஹீ மத்லுவ்
    - சுன்னா வஹி கைறு மத்லுவ்
    - அல்குர்ஆன் கூறும் விடயங்களை சரியாக புரிந்து கொள்ளவும் அதனை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவும் சுன்னா இன்றியமையாததாகும்.

8. "நான் உங்களுக்கு இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவற்றை இறுகப்பற்றி செயல்படுவீர்களாயின் வழிதவற மாட்டீர்கள்" என நபி ஸல் அவர்கள் கூறினார்கள் அவ்விரண்டும் எவை
    1. அல்குர்ஆன்
    2. ஹதீஸ்

9. சுன்னாவின் மீதான எமது கடமைகள் யாவை?
    - சுன்னாவை கற்பது
    - மனனம் இடுவது
    - அதனை செயற்படுத்துவது
    - பிறருக்கு எத்தி வைப்பது

## 18 - வெட்க உணர்வு

1. ஈமான் எத்தனை கிளைகளை கொண்டது?
    - 70க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது.

2. அதில் உயர்ந்தது எது? தாழ்ந்தது எது?
    - உயர்ந்தது - லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்
    - தாழ்ந்தது - பாதையில் இடையூறு தருபவற்றை அகற்றுவதாகும்.

3. *வெட்கம் எந்த கிளையைச் சார்ந்த ஒன்றாகும்?*
    - *ஈமானின் கிளையை*

4. *வெட்கம் தொடர்பான நபிமொழி 2 தருக?*
    - *நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். வெட்க உணர்வு எப்பொழுதும் நன்மையைக் கொண்டுவரும். (ஆதாரம் : புகாரி , முஸ்லிம்)*
    - *நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எந்த ஒரு விடயத்தில் வெட்கம் பேணப்படுகிறதோ அது அச்செயலை அழகாக்கி விடும். மேலும் எந்த ஒரு விடயத்தில் வெட்கம் நீங்கி விடுகிறதோ அது அச்செயலை களங்கப்படுத்தி விடும்.*
      *(ஆதாரம் : திர்மிதி)*

## *19 - ஸீறத்துன் நபி சல்லல்லாஹு அலைஹிவசல்லம்*

1. *இஸ்லாமிய வருட கணிப்பு எந்த நிகழ்வை வைத்து மேற்கொள்ளப்படுகின்றது.*
    - *ஹிஜ்ரத் நிகழ்வை வைத்து*

2. *மதீனாவின் பழைய பெயர் யாது?*
    - *யத்ரிப்*

3. *மக்காவின் பழைய பெயர் யாது?*
    - *பக்கா*

4. *நபி ஸல் அவர்களும் அபூபக்கர் ரலி அவர்களும் ஹிஜ்ரத் செல்லும் போது எந்த குகையில் தங்கினார்கள்.*
    - *தவ்ர் குகையில்*

5. *நபி ஸல் அவர்கள் மதினாவில் நிர்மாணித்த பள்ளிவாசல் எது?*
    - *மஸ்ஜிதுன் நபவி*

6. மதினாவில் ஐங்காலத் தொழுகைக்காக அதான் கூறி மக்களை தொழுகைக்கு அழைத்த நபித்தோழர் யார்?
    - பிலால் ரலியல்லாஹு அன்ஹு

7. மஸ்ஜிதுன் நபவியில்  நிறைவேற்றப்பட்ட பணிகள் யாவை?
    1. ஜமாஅத் தொழுகை
    2. சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்துவைக்கும் நிலையமாக செயற்பட்டது
    3. வெளிநாட்டு தூதுவர்கள் அங்குதான் வரவேற்று உபசரிக்கப்பட்டனர்.
    4. வறியவர்கள் அவசரத்தேவை உடையவர்களுக்கு நிவாரணம் வழங்கும் இடமாகவும் அது செயற்பட்டது
    5. இஸ்லாமிய கலாச்சார நிலையமாகவும் காணப்பட்டது
    6. அறிவைப் புகட்டும் பல்கலைக்கழகமாகவும்  காணப்பட்டது.

8. மக்காவாசிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
    - முஹாஜிரீன்கள்

9. மதீனாவாசிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
    - அன்சாரியின்கள்

10. முஸ்லிம்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றமைக்கான காரணங்கள் இரண்டு தருக?
    1. மக்காவில் முஸ்லிம்கள் மீதான எதிரிகளின் தொந்தரவும் கொடுமைகளும் அதிகரித்து காணப் பட்டன.
    2. இஸ்லாத்தை சுதந்திரமாக பின்பற்றுவதற்காக

11. முஹாஜிர் சகோதரர் அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு தனது சொத்தில் பாதியை வழங்க முன்வந்த அன்சாரித் தோழர் யார்?
    - ஸஃத் இப்னு றபீஆ ரலியல்லாஹு அன்ஹு

## *20 - ஸீறத்துன் நபி - 11*

1. *மதினாவில் பல வருடங்கள் தமக்கிடையே போரிட்டுக் கொண்டிருந்த கோத்திரங்கள் எவை?*
    - *அவ்ஸ், கஸ்ரஜ்*

2. *மதினாவில் கடமையாக்கப்பட்ட கூட்டு கடமைகள் எவை?*
    - *ஜமாஅத் தொழுகை*
    - *ஜும்ஆத் தொழுகை*
    - *நோன்பு*
    - *ஸக்காத்*

3. *நபி ஸல் அவர்கள் மதினாவில் யூதர்களுடன் மேற்கொண்ட உடன்படிக்கை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?*
    - *பைஅது மதினா*

4. *நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட போர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?*
    - *கஸவாத்*

5. *நபி (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட போர்கள் 5 தருக?*
    1. *பத்ரு யுத்தம்*
    2. *உஹது யுத்தம்*
    3. *அஹ்ஸாப் யுத்தம்*
    4. *கைபர் யுத்தம்*
    5. *ஹுனைன் யுத்தம்*

6. *இஸ்லாம் கூறும் யுத்த தர்மங்கள் 5 தருக?*
    1. *அத்துமீறி அநியாயம் அழைத்தவருடன் மாத்திரமே யுத்தம் புரிய அனுமதி உண்டு. பொது மக்களை ஒருபோதும் தாக்கக் கூடாது.*
    2. *போரின்போது பெண்களையும் குழந்தைகளையும் முதியவர்களையும் தாக்க அனுமதி கிடையாது.*
    3. *பசுந் தாவரங்கள் மரங்கள் பயிர் நிலங்கள் போன்றவற்றை சேதப்படுத்த கூடாது.*
    4. *எதிரியை சித்திரவதை செய்யவோ உருக்குலைக்கவோ எரிக்கவோ கூடாது.*
    5. *வழிபாட்டுத் தளங்களையும் மத போதகர்களையும் இலக்குவைத்து தாக்கக் கூடாது.*

7. மதீனா சமூகத்தின் சிறப்பு பண்புகள் 3 தருக?
    1. விருந்தோம்பல்
    2. நேர்மை
    3. பரஸ்பர உதவி
    4. புரிந்துணர்வு

## 21 - உம்மஹாத்துல் முஃமினீன்

1. உம்மஹாதுல் மூமினீன் என்போர் யார்?
    - விசுவாசிகளின் தாய்மார்கள் (நபி ஸல் அவர்களின் மனைவிமார்கள்)

2. அன்னை ஹப்ஸா ரலி அவர்களின் தந்தையின் பெயர் என்ன?
    - உமர் ரலியல்லாஹு அன்ஹு

3. அன்னை ஹப்ஸா ரலி அவர்கள் கலந்து கொண்ட யுத்தமொன்று தருக?
    - பத்ரு யுத்தம்

4. அன்னை ஹப்ஸா ரலி அவர்களின் முதல் கணவனின் பெயர் என்ன?
    - ஹானிஸ் பின் ஹதபா ஸஹ்மி (ரலி)

5. நபி ஸல் அவர்களுக்கும் அன்னை ஹப்ஸா ரலி அவர்களுக்கும் திருமணம் எப்பொழுது நடைபெற்றது?
    - ஹிஜ்ரி இரண்டில் (02)

6. ஹப்ஸா ரலி அவர்கள் எத்தனை வயதில் மரணித்தார்கள்?
    - 63 வயதில்

7. அன்னை உம்மு சல்மா ரழி அவர்களின் இயற்பெயர் யாது?
    - ஹிந்த்

8. அன்னை உம்மு சல்மா ரழி அவர்களின் தந்தையின் பெயர் யாது?
    - அபூ உமையா

9. அன்னை உம்மு சல்மா ரழி அவர்களை நபி ஸல் அவர்கள் எத்தனையாம் ஆண்டு திருமணம் முடித்தார்கள்?
    - ஹிஜிரி 4 இல்

10. அன்னை உம்மு சல்மா ரழி அவர்கள் கலந்து கொண்ட யுத்தம் 2 தருக?
    - கந்தக் யுத்தம்
    - கைபர் யுத்தம்

11. அன்னை உம்மு சல்மா ரழி அவர்கள் அறிவித்த ஹதீஸ்களின் எண்ணிக்கை யாது?
    - 378 ஹதீஸ்கள்

12. அன்னை உம்மு சல்மா ரழி மரணித்த ஆண்டு யாது?
    - ஹிஜ்ரி 63

13. அன்னை உம்மு சல்மா ரழி மரணிக்கும் போது வயது எத்தனை?
    - வயது 84

## 22 - ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா

1. சுவன வாலிபர்களின் தலைவர்கள் என நபி ஸல் அவர்கள் யாரை கூறினார்கள்?
    - ஹஸன் ஹுசைன் ரலியல்லாஹு அன்ஹுமா

2. ஹஸன் ரலி அவர்கள் பிறந்த ஆண்டு எது?
    - ஹிஜ்ரி 3
    - ரமலான் மாதம்

3. ஹஸன் ஹுஸைன் ரழி ஆகிய இரு வரின் பெற்றோர் யார்?
    - அலி ரலி, பாத்திமா ரலி

4. ஹஸன் ரலி ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு, தனது எத்தனையாவது வயதில் மரணித்தார்?
    - ஹிஜ்ரி 49, வயது 46

5. ஹுசைன் ரழி பிறந்த ஆண்டு எது?
    - ஹிஜிரி 4
    - ஷாபான் மாதம்

6. ஹுசைன் ரழி அவர்கள் கலந்து கொண்ட யுத்தம் 3 தருக?
    1. ஜமல் யுத்தம்
    2. சிப்பீன் யுத்தம்
    3. நகர்வான் யுத்தம்

7. ஹுசைன் ரலி அவர்கள் சஹீதாக்கப்பட்ட இடம் எது?
    - கர்பலா

8. ஹுஸைன் ரலி ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டு, எத்தனையாம் வயதில் மரணித்தார்கள்?
    - ஹிஜ்ரி 61
    - முஹர்ரம் மாதம்
    - 56வது வயதில்

9. இவ்விருவர் குறித்து நபி ஸல் அவர்கள் கூறிய இரண்டு கூற்றுகள் தருக?
    - "இவ்விருவரும் இவ்வுலகில் உள்ள எனது இரு றைஹான் பூக்கள்"
    - "சுவன வாலிபர்களின் தலைவர்கள்"

10. ஹுசைன் ரலி அவர்களிடம் காணப்பட்ட நட்பண்புகள் 4 தருக?
    1. அமைதி
    2. எளிமை
    3. துணிவு
    4. சத்தியம்

## *23 - சஹாபாக்கள்*

1. *சஹாபா என்பதன் மொழி கருத்து யாது?*
   - *நண்பர்கள், தோழர்கள்*

2. *சஹாபா என்பதன் வரைவிலக்கணம் யாது?*
   - *நபி ஸல்லல்லாஹு அலைஹி அவர்களின் தோழர்களை குறிக்கும்*

3. *சஹாபா என்று அழைப்பதற்கான வரையறை யாது?*
   - *நபி ஸல் அவர்களின் காலத்தில் வாழ்ந்து அவர்களை நேரடியாக தமது கண்களால் பார்த்து அவர்களை விசுவாசம் கொண்டு கடைசிவரை முஸ்லிமாகவே வாழ்ந்து மரணித்தவர்களை சஹாபாக்கள் எனப்படுவர்.*

4. *பிலால் ரலி அவர்களின் பெற்றோரின் பெயர் யாது?*
   - *ரபாஹா, ஹமாமா*

5. *பிலால் ரலி அவர்களின் தோற்றம் யாது?*
   - *கருப்பு நிறம்*
   - *மெலிந்த உடல்*
   - *சுருட்டை முடி*
   - *தடித்த உதடுகள்*

6. *எந்தக் கோத்திரத்தாரின் ஒட்டகங்களையும் ஆடுகளையும் பிலால் ரலி மேய்த்தார்கள்?*
   - *ஜுமஹ் கோத்திரத்தாரின்*

7. *பிலால் ரலி அவர்களின் எஜமான் யார்?*
   - *உமையா இப்னு கலப்*

8. *அஹதுன், அஹதுன் என்பதன் பொருள் யாது?*
   - *அல்லாஹ் ஒருவன், அல்லாஹ் ஒருவன்*

9. 10 பொற்காசுகளைக் கொடுத்து பிலால் ரலி அவர்களை விடுதலை செய்த நபித்தோழர் யார்?

- அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு

10. இஸ்லாமிய வரலாற்றில் முதல் முஅத்தின் என்ற பெருமை யாருக்குரியது?

- பிலால் ரலியல்லாஹு அன்ஹு

11. பிலால் ரலி எத்தனையாம் ஆண்டு தனது எத்தனையாவது வயதில் மரணித்தார்கள்?

- ஹிஜ்ரி 20ல்
- டமஸ்கஸ்ஸில் தனது 70ஆவது வயதில்

12. அம்மார் ரலி அவர்களின் பெற்றோர் யார்?

- யாஸிர் ரலி
- சுமையா ரலி

13. யாஸிர் ரலி அவர்களின் குடும்பத்திற்கு நபி ஸல் அவர்கள் கூறிய ஆறுதல் வார்த்தை யாது?

- யாஸிரின் குடும்பமே! பொறுமையாக இருங்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட இடம் சுவனமே ஆகும்.

14. சுமையா ரலி அவர்களை கொலை செய்த காபிர் யார்?

- அபூஜஹ்ல்

15. அம்மார் ரலி அவர்கள் யாருடைய ஆட்சிக்காலத்தில் எப்பகுதிக்கு கவர்னராக அனுப்பப்பட்டார்கள்.

- உமர் ரலி அவர்களின் ஆட்சிக்காலத்தில்
- கூபாவின் கவர்னராக நியமிக்கப்பட்டார்

16. அம்மார் ரலி அவர்கள் எந்த யுத்தத்தில் எத்தனையாம் வயதில் ஷஹீதானார்கள்?

- ஸிப்பீன் யுத்தத்தின் போது
- 93 ஆவது வயதில்

17. அம்மார் ரலி அவர்கள் ஹிஜ்ரி எத்தனையில் மரணித்தார்கள்.

- ஹிஜிரி 37

## 24 - நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம்

1. நபி நூஹ் அலை அவர்களின் சிறப்பு பெயர் என்ன?

    - அபுல் பஷர் அத்தானி

2. ஷீது அலை அவர்களுக்குப் பிறகு இறை மார்க்கத்தை மக்களுக்கு கற்றுக் கொடுத்த 5 மார்க்க அறிஞர்கள் யார்?

    1. வத்து
    2. யஊஸு
    3. பஸ்டர்
    4. சுவாஉ
    5. யஊகு

3. நபி நூஹ் அலை அவர்கள் எத்தனை வருடங்கள் பிரச்சாரம் செய்தார்கள்?

    - 950 வருடங்கள்

4. நபி நூஹ் அலை அவர்களின் கப்பல் எந்த மலையில் தரை நட்டியது?

    - ஜூதி மலை

5. நூஹ் அலை அவர்களின் காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் பெயர் யாது?

    - தூபான் வெள்ளம்

**25 - அவ்ரத்தைப் பேணி நடப்போம்**

*1. அவ்ரத் என்றால் என்ன?*

- *கட்டாயம் மறைக்க வேண்டிய பகுதிகள்*

*2. அல்லாஹ் வரையறை செய்த ஆண் பெண்களுக்கான அவ்ரத் யாது?*

- *ஆண்களின் அவ்ரத் : தொப்புளுக்கும் முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதியில்*
- *பெண்களின் அவ்ரத் : முகம், மணிக்கட்டு தவிர்ந்த ஏனைய பகுதிகள்*

*3. பெண்களுக்கு அனுமதிக்கப் பட்ட ஆபரணம் யாது?*

- *தங்கம், வெள்ளி*

*4. ஆண்களுக்கு தடை செய்யப்பட்ட ஆடை ஆபரணங்கள் எது?*

- *தங்கம், பட்டாடை*

*5. அஜ்னபி , மஹ்ரமி என்போர் யார்?*

- *அஜ்னபி என்றால் திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர்கள்*
- *மஹ்ரமி என்றால் திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாதவர்கள்*

*6. பிறர் வீட்டில் நுழைவதற்கு இஸ்லாம் காட்டித்தந்த விதிமுறைகள் யாது?*

- *மூன்று முறை ஸலாம் கூற வேண்டும்*
- *மூன்று முறை கதவில் தட்ட வேண்டும்*
- *திடீரென வீட்டுக்குள் நுழைவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்*
- *மணியை அழுத்தியோ வாயால் அழைத்தோ அனுமதி பெறலாம்*

- அனுமதி கிடைக்காவிட்டால் அல்லது வீட்டில் யாரும் இல்லை என்று தெரிந்தால் திரும்பிச் சென்றுவிட வேண்டும்.

*7.* பெற்றோரின் அறையில் நுழைவதற்கு மூன்று சந்தர்ப்பங்களில் அனுமதி கோர வேண்டும் என இஸ்லாம் கூறுகின்றது. அந்த மூன்று சந்தர்ப்பங்கள் எவை?

*1.* ஃபஜர் தொழுகைக்கு முன்னரும்

*2.* பகல் பொழுதிலும்

*3.* இஷாத் தொழுகைக்குப் பின்னரும்

## 26 - இஸ்லாமிய இல்லம்

1. இறை இல்லங்கள் எப்படி அமைய வேண்டும்?
    1. இறைவனை நினைவு கூறும் இல்லமாக இருக்க வேண்டும்
    2. அங்கு இறைவசனங்கள் ஓதப்பட வேண்டும்
    3. மார்க்கம் போதிக்கப்பட வேண்டும்

2. அல்லாஹ்வை நினைவு கூறப்படும் இல்லத்திற்கும் இறை நினைவை இழந்த இல்லத்திற்கும் இறைத்தூதர் காட்டும் உவமை யாது?
    - அல்லாஹுவை நினைவு கூறப்படும் இல்லத்தின் நிலை உயிர் உள்ளவர்களின் நிலைக்கும்
    - அல்லாஹ்வை நினைவு கூறப்படாத இல்லத்தின் நிலை உயிரற்றவரின் நிலைக்கும் ஒத்ததாகும்.

3. எந்த வீட்டில் சைத்தான் நுழைய மாட்டான்?
    - சூரத்துல் பகரா ஓதப்படும் வீட்டில்

4. இஸ்லாமிய வீடு எவ்வாறு அமைய வேண்டும்?
    - அமைதியின் அடித்தளமாக இருக்க வேண்டும்
    - கல்விக் கூடமாக அமைய வேண்டும்
    - குழந்தைகளுக்கு இஸ்லாமிய பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுக்கும் இடமாக இருக்க வேண்டும்.

5. வீட்டுச் சூழலில் கடைபிடிக்க வேண்டிய விடயங்கள் 5 தருக?
    a. வீட்டில் நுழையும் முன் ஸலாம் கூறிக் கொள்ள வேண்டும்
    b. வீட்டில் நுழையும் போது நபி ஸல் அவர்கள் கற்றுத்தந்த துஆவை ஓத வேண்டும்
    c. குடும்பத்தில் அனைத்து உறவினர்களுடனும் சகோதரத்துடன் சேர்ந்து நடந்து கொள்ள வேண்டும்
    d. விட்டுக்கொடுத்தல், தர்மம் செய்தல், விருந்தோம்பல், இங்கிதமாக பேசுதல் போன்ற பழக்கங்களை கடைப் பிடித்தல் வேண்டும்
    e. பொய், பொறாமை கோள், புறம் போன்ற குடும்ப உறவுகளை பாதிக்கும் மோசமான பண்புகளை விட்டும் தவிர்ந்து கொள்ளல்
    f. எப்பொழுதும் வீட்டையும் வீட்டுச் சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல்
    g. வீட்டுப் பாவனைப் பொருட்களை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் சுத்தமாகவும் வைத்திருத்தல்.

## 27 - பொதுச் சொத்துக்களை பாதுகாப்போம்

1. பொதுச் சொத்துக்கள் 5 தருக?
    1. வகுப்பறை கட்டிடங்கள்
    2. பேருந்து நிலையம்
    3. காரியாலயம்
    4. மைதானம்
    5. கடற்கரை

2. நாம் காணும் சொத்துக்களை இரண்டாகப் பிரிக்கலாம் .அவை எவை?
    1. தனியார் சொத்து
    2. பொதுச்சொத்து

3. வக்ஃப் என்றால் என்ன?
    - தனியுடமை பொது உடமை ஆக்கப்படுதல்

4. பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது தொடர்பாக நபிமொழி ஒன்று தருக.

- *நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள் உங்களுடைய பொறுப்புகள் பற்றி மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள். (ஹதீஸ்)*

5. *பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சந்தர்ப்பங்கள் 4 தருக?*
   1. *பாதை ஓரங்களில் மலம் கழித்தல்*
   2. *வீட்டு முற்றங்களில் கழிவுப்பொருட்களை கொட்டுதல்*
   3. *வாகனத்தில் செல்லும்போது ஏதாவது உணவு பண்டங்களை சாப்பிட்டு விட்டு அதன் கழிவுகளை வாகனத்தின் வெளியே வீசுதல்*
   4. *நீர்நிலைகளில் குப்பைகளை கொட்டுதல்*
   5. *பாடசாலை பொதுச் சொத்துக்களை உடைத்தல்*

## *28 தேசப்பற்றும் முஸ்லிம்களும்*

1. *400 ஆண்டுகளுக்கு முன்னர் கண்டியை ஆட்சி செய்த மன்னன் யார்?*
   - *செனரத் மன்னன்*

2. *தன்னை காட்டிக் கொடுக்காமல் உயிர்நீத்த முஸ்லிம் பெண்மணியை பார்த்த இளவரசன் கூறிய வார்த்தை யாது?*
   - *மா ரெகலே (என்னை காத்த இரத்தமே)*

3. *இரண்டாம் இராஜசிங்க மன்னன் தனக்காக உயிர் நீத்த முஸ்லிம் பெண்ணின் நினைவாக அவளது உறவினருக்கு வழங்கிய கிராமத்தின் பெயர் என்ன?*
   - *பங்கர கம்மண*

4. *நபி ஸல் அவர்கள் மக்காவை விட்டும் ஹிஜ்ரத் சென்ற போது மக்காவை நோக்கி கூறிய வார்த்தை யாது?*
   - *“இந்த பூமியில் உள்ள அனைத்து ஊர்களிலும் நீதான் எனக்கு மிக விருப்பமான ஊராக இருக்கின்றாய்.*

நிச்சயமாக எனது சமூகத்தார் என்னை வெளியேற்றி இருக்காவிட்டால் நீ அல்லாத ஓர் ஊரில் நான் வசித்து இருக்க மாட்டேன்" என கவலையுடன் குறிப்பிட்டார்

5. நாட்டுப் பெயருடன் சேர்த்து பெயர் குறிப்பிடப்படும் நான்கு சஹாபாக்களின் பெயர்களை தருக?
    1. சல்மான் அல்பாரிஸி
    2. பிலால் பின் ரபாஹ்
    3. சுஹைப் அர்ரூமி
    4. ஹுதைபதுல் யமானி

6. தேசத்திற்கு என் மீது உள்ள பொறுப்புகள் யாவை?
    - நாட்டின் சுதந்திரம்
    - கல்வி
    - பாதுகாப்பு
    - ஆரோக்கியம்
    - சக வாழ்வு போன்ற வளர்ச்சிக்கு உதவிட வேண்டும்.
    - நாடு ஆபத்துக்கோ வறுமைக்கோ பஞ்சத்திற்கோ உள்ளாகும் போது நாடு எதிர்கொள்ளும் சோதனையை விடுவிக்க பாடுபடுவதும் தேசப்பற்றின் அடையாளமாகும்.